பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 1௳ (17—11—67) வெள்ளி வெளியூர்: கார்த்திகை 2௳ (18—11—67) சனி [இதழ்: 129

பதிலேடு

'சொல்லுகிறார்...! சுந்தரய்யா

"மக்கள் ஆதரவு பெற்ற ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கவிழ்க்க இந்திரா முழு மூச்சுடன் பாடுபடுகிறார்!

"ஆனால், சோவியத் யூனியனுக்கோ, இங்கே உள்ள இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியைக் காட்டிலும் இந்திராவைத்தான் பெரிதும் பிடிக்கிறது!"

—இரஷ்யப் புரட்சியின் 50-வது ஆண்டு விழாவின்போது, கல்கத்தாவில் பேசியது.

காற்று—சுப்பிரமணியத்தின் பக்கம் வீசுமா?

'நம் நாடு' விவாதித்த யூகத்தை 'பி.டி.ஐ.' உறுதிப்படுத்துகிறது!

காங்கிரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் புதிய திருப்பம் ஒன்று தோன்றியிருப்பதாக பி. டி. ஐ. நிறுவனத்தின் புதுடில்லிச் செய்தி கூறுகிறது.

"ஏகமனதாகத் தேர்வு நடக்க வேண்டுமென்றால், அதற்கு நந்தாவோ, பாட்டீலோ பொருத்தமான வேட்பாளர்களல்லர்" எனக் கருதப்படுவதாகத் தெரிகிறது.

"ஏகமனதாகத் தேர்வு செய்வதற்குத் தகுதியாக மத்திய அமைச்சர் ராம் சுபாக் சிங், இராஜஸ்தான் அமைச்சர் சுகாதியா, சி. சுப்பிரமணியம் ஆகியோரின் பெயர்கள் அடிபடுகின்றன" என்று பி. டி. ஐ. செய்தி கூறுகிறது.

"சுகாதியா இராஜஸ்தானைவிட்டு வெளியே வருவது, ஏற்கனவே ஆபத்தான நிலையில் உள்ள அந்த மாநிலத்துக்கு நல்லதல்ல" என்பதனை, எல்லா காங்கிரசுக்காரர்களும் உணருகின்றனர்!

'போட்டி இல்லை' என்ற நிலையில், 'கௌரவமாகக் கிடைத்தால்தான் சம்மதிப்பேன்; இல்லையென்றால், அமைச்சர் பதவியை விட்டு வருவதில் பொருளில்லை' என்ற மனப்போக்கில் இராம் சுபாக் சிங் இருப்பதாகத் தெரிகிறது!

எஞ்சியிருப்பவர் சுப்பிரமணியம் மட்டுமே! அவரைப் பற்றிய பிரதிபலிப்புதான், இந்திரா—காமராசர் ஆகிய இருவரிடமிருந்தும் வெளிவரவில்லை!

எனினும், சுப்பிரமணியம், 'இந்திராவின் நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவர்' என்பது, அனைவரும் அறிந்த ஓர் உண்மையாகும்.

எனவே, 'வாய் திறக்க' வேண்டியது, இதுவரையில் வாயை மூடிக்கொண்டிருக்கும் காமராசர்தான்!

இந்த அடிப்படையை வைத்துத்தான், "காமராசரின் 'கன்சென்சஸ்' முறை, சுப்பிரமணியத்துக்குப் பயன்படட்டுமே" என்ற தலைப்பில் நேற்று 'நம் நாடு' இதழில் — 'டில்லி அரங்கம்' என்ற பகுதியில், மூன்றாவது கட்டுரை எழுதப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நிசாமின் சொத்து மதிப்பு!

புதுடில்லி, நவ. 17—

"1960—61-ம் ஆண்டில் ஐதராபாத் நிசாம் சொத்தின் மொத்த மதிப்பு ரூ. 8,22,73,647-ஆக இருந்தது"

என்று நாடாளுமன்றத்தில், சசிபூஷன் என்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறினார்.

நிசாமின் சொத்து விவரமாவது:—

வீடு—மற்றும் நிலங்களின் மதிப்பும் ரூ 1,51,85,454; கையிருப்பும் பணமும் பாங்கியில் உள்ளதும் ரூ 11,69,829; பங்குத் தொகைகளின் மதிப்பு: ரூ. 4,74,24,534; நகைகள்: ரூ. 1,13,75,390; மற்ற சொத்துக்களின் மதிப்பும் ரூ. 2,52,12,490.

நிசாமுக்கு இருந்த கடன் வகைகள் ரூ. 1,80,94,050.

இரா. செழியன் தாயகம் திரும்பினார்

சென்னை, நவ. 16—

'நம் நாடு' ஆசிரியரும் நாடாளுமன்ற கழக உறுப்பினருமான இரா. செழியன் அவர்கள், தமது மேனாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, இன்று மாலை 4-மணிக்கு விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்தார்.

சர்வதேச அரசியல் பார்வையாளராகத் திரு. இரா. செழியன் அவர்கள், கடந்த ஆகஸ்டு மாதம் 16-ம் நாளன்று டெல்லியிலிருந்து புறப்பட்டு மூன்று மாதங்களாக ஐரோப்பா, அமெரிக்கா, மற்றும் தூர–மத்தியக் கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார்.

நவம்பர் 15-ம் நாள் மாலை ஹாங்காங்கிலிருந்து புறப்படும் விமானத்தில் கொழும்பு வழியாக இன்று மாலை 4-மணிக்கு மீனம்பாக்கம் வந்திறங்கினார்.

விமான நிலையத்தில் சென்னை மாவட்டக் கழகத் தோழர்களும், மற்றும் நண்பர்களும் திரளாகக் கூடியிருந்து வரவேற்றனர்.

'மாநில முதலமைச்சர் கருத்தை மத்திய அரசு ஆய்வது அவசியம்'

'மிக்க வலிவுடன் இருப்பதாலேயே செய்வதெல்லாம் சரியாகிவிடாது'

கவர்னர்கள் நியமனப் பிரச்னை—நாடாளுமன்றத்தில் க. அன்பழகன் தெளிவுரை

புதுடில்லி, நவ. 15—

"மத்திய அரசில் ஆளுங்கட்சி வலிவுடன விளங்குவதால் மட்டும், அது செயவதெல்லாம் சரியாகிவிடாது; 'காங்கிரசு ஆளும் மாநிலத்துக்கு ஒரு விதி—காங்கிரசல்லாத மாநிலத்துக்கு மற்றொரு விதி' என்ற போக்கை மத்திய அரசு கடைபிடிக்கக்கூடாது.

"கவர்னரை நியமிப்பதற்குமுன் குடியரசுத் தலைவர் மாநில முதல்வரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்"

என்று, பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், நாடாளுமன்றத்தில் 'கவர்னர் பதவியைத் தவறான முறையில் மத்திய அரசு பயன்படுத்திக் கொள்ளுகிறது' என்ற கண்டனத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசுகையில் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மாநில முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி—சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்; ஆகவே, கவர்னர் பதவி நியமனத்தின்போது முதலமைச்சர் கருத்தினை மத்திய அரசு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்."

சங்கரி இடைத் தேர்தல்

ஆட்சிமன்றக் குழுக் கூட்டம்

சங்கரி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் சம்பந்தமான நிலைமைகளைக் கண்டறிந்து ஆவன செய்வதற்காக, கழக ஆட்சிமன்றக் குழுக் கூட்டம், 19—11—67 ஞாயிறு காலை 10-மணிக்கு சங்கரி பயணிகள் விடுதியில் நடைபெறுகிறது.

ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி., திரு. மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., திரு. அன்பில் தருமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு ஆய்வு நடத்துவர்.

சேலம் மாவட்டச் செயலாளர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், சங்கரி வட்ட நிர்வாகிகள் — தோழர்கள் ஆட்சிமன்றக் குழுவின் பணிக்கு உடனிருந்து ஆவன செய்வர்.

தொகுதியின் தேர்தல் நிலைமைகள் குறித்துச் சங்கரி சட்டமன்றத் தொகுதியிலுள்ள கழகக் கிளைகள்—சார்பு மன்றங்கள்—துணை அமைப்புகள்—படிப்பகங்கள் ஆகியவைகளைச் சார்ந்த நிர்வாகிகளும், தோழர்களும், மற்றும் தொகுதியின் கழக ஆதரவாளர்களும் சங்கரி பயணிகள் விடுதிக்குக் குறிப்பிட்ட நேரத்தில் வருகைதந்து, குழுவினரிடம் தங்கள் தங்கள் கருத்தைத் தெளிவாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆட்சிமன்றக் குழுவினிடத்தில் வேட்பாளர் விண்ணப்ப மனு கொடுக்க விரும்பும் கழகத் தோழர்கள், உரிய பரிந்துரைகளுடனும், உரிய விண்ணப்பக் கட்டணத்துடனும் (ரூ. 25) முறைப்படி அதற்கென உள்ள தாள்களில் நிறைவு செய்து குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

டில்லி அரங்கம்—4

இருவர் விரும்பும் ஒருவர்

எதிர்பார்த்திருந்த நவம்பர் 16 போய்விட்டது! இனி காங்கிரசு செயற்குழுவிடமிருந்து தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் பற்றி அதிகாரபூர்வமான முடிவுகள் எதனையும் எதிர்பார்க்க முடியாது!

டிசம்பர் 1-ந்தேதி வரை இடையிலுள்ள இரு வார காலத்தில் புதுடில்லியிலிருந்து எதையும் எதிர்பார்க்கலாம்!

முக்கிய முடிவு பற்றி நேற்று அரை மணி நேரமே கூடிக் கலைந்திருக்கின்றனர்; அதுவும், 'ஒருமித்த கருத்து எதனையும் உருவாக்காமல்' என்ற நிலையைப் பார்க்கும்போது, அங்கே வந்திருந்தவர்களின் இதயங்கள் எவ்வளவு கனத்திருந்தன என்பதை விளக்கத் தேவையில்லை!

வெளியே பேசப்பட்டுவரும் பாட்டீல்—நந்தா போட்டியைப் பற்றிக்கூட எவரும் வாய் திறக்கவில்லை;

ஒருவரையொருவர் ஆழம் பார்க்கும் வேலை இது! கடைசியில் செட்டியார் பால் வார்த்த வேடிக்கையாகவும் முடியக் கூடும்!

இந்திரா அழைப்பின்பேரில், தலைமையமைச்சரின் அலுவலகம் சென்று பேசியிருக்கிறார், காமராசர்!

'காங்கிரசுத் தலைமைக்கு வேறு யாராவது வரவேண்டும்'

என இந்திராவும்,

'புதுடில்லியில் இருப்பதில் பிரயோசனமில்லை என்றால், போகிறேன்—பழைய இடத்துக்கு; மறு தேர்தல் எனக்கு வேண்டியதில்லை'

என காமராசரும்

முடிவு செய்ததாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன!

ஒருவர் பாயின்கீழ் நுழைபவர் என்றால், மற்றொருவர் கோலத்துக்கும் கீழேயே மறையும் திறமை பெற்றவராக இருக்கிறார்!

எப்படியோ ஒருவரையொருவர் விரும்பவில்லை என்பதனை, 'மிக நாகரிகமாக' வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்!

"இந்த இருவரது முடிவுக்கும், தலைமைப் பதவிக்கான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கச் செயற்குழு, அதிகாரபூர்வமற்ற முறையில் அதிகாரம் அளித்திருக்கிறது" என்பதுதான் வேடிக்கையின் உச்சக்கட்டம்!

இந்த 'நையாண்டி'யின் காரணகர்த்தா, மொரார்ஜி தேசாய்!

'விரலை ஆட்டிக்கொண்டே வாழைப்பழத்தையும் விழுங்க வேண்டும்' என்ற சிறுவர் விளையாட்டைப் போலத்தான் இருக்கிறது இது!

இந்திராவும் காமராசரும் கருத்தொருமிப்பது எங்கே? பின்னால், வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பது எப்படி?—மொரார்ஜியின் இந்த யோசனையில், 'அரசியல் விஷம்' அத்தனையும் இருக்கிறது!

'ஒருவரையொருவர் விரும்பவில்லை' என்ற ஓர் உண்மையில் தான், இந்திராவுக்கும்—காமராசருக்கும் ஒற்றுமை இருக்கிறது! மற்ற எல்லா விவகாரங்களிலும் வேற்றுமைதான்!

எனவே, தலைவரைத் தேர்ந்தெடுப்பது, இருவர் கைகளிலுமில்லை! மற்ற எவரின் தனிப்பட்ட திறமையிலும் கிடையாது! செயற்குழுக் கூட்டத்தின் 'மயான அமைதி'க்கும் இதுதான் காரணம்!

ஒருவர் பலம் என்ன என்பது பற்றி மற்றவருக்குப் புலப்படவில்லை! அதுவரையில், சுகாதியா, நிஜலிங்கப்பா, குப்தா—என்று, இன்னும் பல பெயர்கள் வந்துகொண்டே இருப்பதில் வியப்பேதும் இருக்க முடியாது!

—எஸ். ஆர்.

பெற்ற வெற்றி இறுதியானதல்ல'

பெறவேண்டிய வெற்றியும் புரியவேண்டிய பணியும் நிரம்ப இருக்கிறது!

கழகத் தோழர்கட்கு அண்ணா அறிவுறுத்தல்

"கதிர் முற்றியதும் பயிர் வளைவதைப்போல் வெற்றியும் பொறுப்பும் கிடைத்ததும் நமது அடக்கம் வளர வேண்டும்; ஏனெனில், இந்த வெற்றி இறுதி வெற்றியுமல்ல—பெரிய வெற்றியுமல்ல! நாம் பெறவேண்டிய வெற்றி இன்னும் இருக்கிறது!

" 'நாட்டு மக்களின் நலனுக்கு நாம் நேற்று என்ன செய்தோம்—இன்று என்ன செய்கிறோம்—நாளை என்ன செய்யப் போகிறோம்" என்ற அடிப்படையில் நாம் பணிபுரிய வேண்டும்! அந்த மக்கள் பணியில் வெற்றிபெற வேண்டும்!"

இவ்வாறு அறிஞர் அண்ணா அவர்கள், திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற நன்றியறிவிப்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். அவர் மேலும் கூறியதாவது :—

"நவ. 6-ந் தேதியன்று, 'தேர்தல் பணிகள் எப்படி நடைபெறுகின்றன' என்பதைக் காணச் சென்றேன். எல்லா இடங்களிலும் நமது தோழர்கள் பாதையின் ஓரத்தில் உதயசூரியன் சின்னத்தை எழுதுவதிலும், கொடி—தோரணங்கள் கட்டுவதிலும், கூடி நின்று, 'நாளையத் தினம் எப்படிச் செயல்பட வேண்டும்' என்பதைப் பற்றி விவாதிப்பதிலும் ஈடுபட்டு இருந்தார்கள்.

குறிப்பாக சைதைத் தொகுதியில் நமது தோழர்கள், கண் விழிப்பாக இருந்து பணியாற்றுவதைக் கண்டேன்!

வீதிக்கு வீதி நமது தோழர்கள் பணியாற்றுவதைக் கண்ட காங்கிரசுக்காரர்கள், தூங்கி எழுந்து, 'நாமும் வேலை செய்வதாகக் காட்டவேண்டுமே' என்பதற்காக வேலை செய்ததையும் கண்டேன்!

நான் 91-வது வட்டத்திற்குச் சென்றபோது, தங்கள் குழுக் கூட்டத்தை முடித்துவிட்டு தோழர்கள் வந்தார்கள்; அப்போது மணி மூன்றரை இருக்கும்; நான் அவர்களிடம், தேர்தல் வேலைகளைப் பற்றி விசாரித்தேன்; 'எல்லா வட்டங்களையும் விட அதிகமான அளவில் இந்த வட்டத்தில் ஓட்டு வாங்கிக் காட்டப்போகிறோம்' என்று உறுதியளித்தார்கள்!

நாளைய பணி பற்றி இன்று இரவு நெடுநேரம் விவாதிக்கும் நண்பர்களைக் கண்டதுமே எனக்கு ஓர் உற்சாகம் ஏற்பட்டது.

'எழும்பூர் தொகுதியில் சில இடங்களில் வேலை சரிவர நடக்கவில்லை' என யாரோ சிலர் கூறியதால், அங்கு சென்று பார்த்தேன்; நான் கேள்விப்பட்டதற்கு மாறாக நல்ல முறையில் பணிகள் நடைபெறுவதைக் கண்டேன்.

அப்போதே நான் தீர்மானித்துக் கொண்டேன் — 'நாம் ஆட்சிப்பீடம் ஏறிய பிறகும், நமது இயல்பை நாம் இழக்கவில்லை; உழைக்கும் திறன் நம்மைவிட்டுப் போய்விடவில்லை; மேலும் அது வளர்ந்திருக்கிறது' என்று!

'எவ்வளவு உயரத்தில் இருப்பவர் எவ்வளவு கேவலமான இழிமொழிகளை—பழிச் சொற்களைக் கொட்டினாலும், அவர்களுக்கு, நாம் நமது உற்சாகத்தை—உழைக்கும் திறனை இழக்கவில்லை; கொள்கை—கோட்பாட்டை மறக்காமல் பணியாற்றுகிறோம்' என்பதனை உணர்ந்து பணிபுரியும் வீரர்களைக் கொண்டது இந்தக் கழகம்—என்பதை நினைவூட்டினோம்!

இத்தகைய உண்மையான உழைப்பாளிகளைக் கொண்ட இந்த இயக்கத்தை தலைமையேற்று நடத்துவதில் பெருமையடைகிறேன்.

இதைவிட உலகில் ஒருவர் விரும்புகிற செல்வம் வேறென்ன இருக்கமுடியும்? வேறு எதில் பெருமைகொள்ள முடியும்?

தவறான நம்பிக்கையால் தழுவினர் தோல்வியை!

காங்கிரசுக்காரர்கள் இந்தத் தேர்தலில் மிகவும் நம்பிக்கையாக இருந்ததற்குக் காரணம், தி. மு. கழகம் ஆட்சிபீடம் ஏறியதற்குப் பிறகு இந்த ஆறு மாதங்களில் மக்கள் அதிருப்தியடைந்துவிட்டார்கள்' என்று நம்பியதுதான்!

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் கூறிய வார்த்தையின்படி, உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு கூறுகிறேன்—'போதையில் மக்கள் பொதுத் தேர்தலில் வாக்களித்தார்கள்' என்று நம்பியதுதான்!

அவர்கள் நடத்தாதது என்னதான் உண்டு?

தேர்தல் நேரத்தில் அவர்கள் கூட்டமா போட்டார்கள்—மாநாடுகளைத்தான் போட்டார்கள்—'தியாகராயநகர் மாநாடு'—'சைதாப்பேட்டை மாநாடு' என்று மாநாடுகளை நடத்தினார்கள்! பெரும்பாலும் ஒரே இடத்தில் அவை நடைபெற்றாலும், பெயரை மட்டும் மாற்றி மாற்றி வைத்து நடத்தினார்கள்!

'போர் அணி' என்றும், 'பேரணி' என்றும், 'ஊர்வலம்' என்றும் நடத்தினார்கள்!

வட நாட்டிலிருந்து வேறு ஏதோ ஒரு வேலைக்காக இங்கு வந்த சுமார் 10 எம்.பி.-க்களை, தேர்தல் வேலைக்காகவே வந்தவர்களைப்போல் கருதி, வாக்குக் கேட்கும் பணியில் ஈடுபடுத்தினார்கள்!

'காங்கிரசுப் பக்கம் மாணவர்கள் இருக்கிறார்கள்' என்று காட்டுவதைப்போல், 'மாணவர் மாநாடு'ம் நடத்தினார்கள்!

'தரம்' கெட்டுப் பேசி 'தலை' தாழ்ந்தனர்!

இத்தனைக்கும் மேலாக, 'மக்கள் இந்த ஆட்சியில் அதிருப்தியும், சலிப்பும், வெறுப்பும் அடைந்துவிட்டார்கள்' என்று நம்பி, தரங்கெட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள்! ஆனால், அவர்களின் எந்த முயற்சியும் நம் வெற்றியைப் பாதிக்கவில்லை!

அண்ணா ஆட்சியின் சாதனை வென்றது!

'தரம்' குறைந்த பேச்சால் கழகத்தை வெல்ல முடியாது

ஏழை மக்களின் ஆதரவு கழகத்தின் பக்கமே என்றும் இருக்கும்

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் முழக்கம்

" தி.மு.கழகம் துவக்கப்பட்ட நாள்முதல், தான் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வந்திருக்கிறது. உங்களுடைய பெரும்பாலான ஒத்துழைப்பாலும், ஆதரவாலும் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் கழகம், மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளை நிச்சயம் நிறைவேற்றும்!

" கடந்த எட்டு மாதங்களாக அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக வீற்றிருந்து அளித்த உறுதிமொழிகளை நாம் இது வரை மறந்ததுமில்லை—மறுத்ததுமில்லை; எந்த வகையிலும் அவைகளை நிறைவேற்றியே தீருவோம் "

என்று அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், தென் சென்னை வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கவும்—வெற்றி பெற்ற முரசொலி மாறனைப் பாராட்டவும் 15-11-67 அன்று சென்னை – திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நடந்து முடிந்த தென் சென்னைத் தேர்தலில் குடிசைவாழ் மக்களிடம் நாங்கள் சென்று வாக்குகளைக் கேட்டபோது, அவர்கள் உறுதியோடும், உற்சாகத்தோடும் கழகத்துக்கே வாக்கு அளிக்க முடிவு செய்திருந்ததை காண முடிந்தது.

தென் சென்னைத் தேர்தலில் காங்கிரசார் மட்டமான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். முன்னாள் மத்திய அமைச்சர் அழகேசன், 'மக்கள் தி. மு கழகத்தை 'சூர சம்ஹாரம்' செய்யப்போகிறார்கள்' என்று கூறினார்; ஆனால் மக்கள், காங்கிரசையே அந்த நிலைக்கு ஆளாக்கினார்கள்! கழகத்துக்குப் பெருவாரியான வாக்குகளால் வெற்றியைத் தேடித் தந்தார்கள்!

தேர்தல் முடிந்த பிறகாவது அவர்களிடம் அடக்கம் இருக்கிறதா என்றால், இல்லை!

நேற்று இங்கு நடந்த கூட்டத்தில் பேசியிருக்கும் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், 'தி.மு. கழகம் பிரிவினைக் கட்சி' என்று—அவருக்கே உரித்தான முறையில் — கழகத்தை வசைபாடியிருக்கிறார்; ஆனால், அவருக்குப் பின் பேசிய முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், 'குழந்தைகள் தின விழாவில், பக்தவத்சலம் அரசியல் பேசியதற்காக வருந்துகிறேன்; மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்' என்று கூறியிருக்கிறார்.

இப்படி, எந்த இடத்தில் எதைப் பேசுவது என்று தெரியாமல், நம்மைத் திட்டுவதிலேயே பக்தவத்சலம் குறியாக இருக்கிறார்!

காங்கிரசுக்காரர்கள் மிகக் கேவலமான பிரச்சாரத்தில் ஈடுபட்டபோதிலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அயராது உழைத்து கழகத்துக்கும் மாறனுக்கும் மாபெரும் வெற்றியைத் தேடித் தந்து—அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பார்த்த அன்புக் காணிக்கையை வழங்கியிருக்கிறீர்கள்.

குடிசைவாழ் மக்கள் நமக்குப் பெருவாரியாக வாக்களித்திருக்கிறார்கள். இப்படிப் பெருவாரியான வாக்குகள் கிடைக்க உழைத்து கழகத்திற்கும், மாறன் அவர்களுக்கும், அறிஞர் அண்ணா அவர்களுக்கும் பெருமையைத் தேடித் தந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிந்துக்கொள்கிறேன்."

நம்மை அழிக்க நினைத்தவர்களின் எண்ணமே அழிந்து போயிற்று!

இந்தி ஆதிக்கம் இங்கே நுழைய முடியாது!

க. இராசாராம் முழக்கம்

சென்னை, நவ. 15—

" மாறனுக்கும் கிடைத்திருக்கும் இம்மாபெரும் வெற்றியின் பயனாக வடக்கே இருக்கிற இந்தி வெறியர்கள், அச்சத்தோடு எங்களை வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

" மாறனின் வெற்றி, தமிழகத்தில், 'இன்று மட்டுமல்ல—இனி என்றென்றும் இந்தி ஆதிக்கம் இங்கே நுழைய முடியாது' என்பதை எடுத்துக் காட்டுவதாகும் "

என்று, திரு. க. இராசாராம் எம்.பி. அவர்கள், மாறனுக்குப் பாராட்டு தெரிவிக்கவும்—வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"1957-ம் ஆண்டில் கழகச் சார்பில் இருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றம் சென்றிருந்தார்கள். 1958-ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களும், நானும், மற்றொரு நண்பரும் காரிலேயே டெல்லிக்குச் சென்றோம்; 'நமது நண்பர்கள் நாடாளுமன்றத்தில் எப்படிப் பணியாற்றுகிறார்கள்' என்பதை நேரில் பார்க்கவே அவ்வாறு சென்றோம். அப்போது பண்டித நேரு முதலமைச்சராக இருந்தார்; கே. சி. பந்த் என்பவர் உள்நாட்டு அமைச்சராக இருந்தார்.

இவ்வளவு பெரிய சிங்கங்களெல்லாம் நிறைந்த இடத்தில், இரண்டுபேர்களை மட்டுமே விட்டுவைத்திருப்பதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் அச்சம் கொண்டார்கள்!

அதற்கு அடுத்து, 1962-ம் ஆண்டு நடந்த தேர்தலில் 2 பேர் சென்ற இடத்திற்கு 8 பேர் சென்றோம்; அப்போது தி. மு. கழகக் குரலுக்கு ஒரு மரியாதையும், தகுதியும் தரும நிலை உருவாயிற்று!

அதன்பின் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையின் காரணமாக, மாநிலங்களவைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் வடநாட்டு நுழைவு, ஒரு மாற்றத்தையே ஏற்படுத்தியது—ஒரு வரலாற்றுத் திருப்பத்தையே ஏற்படுத்தியது!

அறிஞர் அண்ணாவின் புதுடில்லி நுழைவுக்குப் பிறகுதான், 'தி மு. கழகத்தையே ஒழித்துக் கட்ட வேண்டும்' என்ற தீய எண்ணத்துடன், பிரிவினைத் தடைச் சட்டத்தினைக் கொண்டுவர முனைந்தார்கள்!

பிரிவினை பேசினால், சட்டமன்றம் நாடாளுமன்றம் ஆகியவற்றிற்குப் போட்டியிடாமல் செய்து கழகத்தைத் தடை செய்வதற்கு அந்தச் சட்டத்தைக் கொண்டு வரத் திட்டமிட்டார்கள்!

இதற்கென சி. பி. இராமசாமி ஐயர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, முத்தநாப் பற்றி தமிழ்நாட்டில் ஆராயச் சொன்னார்கள். இந்தக் குழு இங்கு வந்த வேளையில், அண்ணா—மற்றும் தலைவர்கள் சிறையிலே இருந்தார்கள்!

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் மற்றும் சிலரும் வெளியே இருந்தனர்; வந்த குழுவும் ஒழுங்காக விசாரிக்காமல் போய் சேர்ந்தது.

எவ்வளவு எதிர்ப்பிருந்தும் பொருட்படுத்தாமல் பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தனர்! அந்தச் சட்டம் கழகத்தை மட்டுமல்ல—தமிழை, தமிழக மக்களை அடக்குகின்ற சட்டமாக உருவாக்கினார்கள்! நமது தலைவர்களின் கருத்தைக் கேட்காமலேயே சட்டத்தை உருவாக்கினார்கள்!

இந்த வேளையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள், மிகத் தெளிவான நடவடிக்கையை மேற்கொண்டு நம் கழகத்தைக் காப்பாற்றினார்கள்—'தி.மு. கழகம் பிரிவினையைக் கைவிட்டுவிட்டது' என அறிவித்து கழகத்தைக் காப்பாற்றினார்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள் அன்று கழகத்தை அப்படிக் காப்பாற்றி இருக்காவிட்டால்—திறமையான மாறுதலைச் செய்யாதிருந்திருந்தால்—இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ இருந்திருக்கமாட்டார்கள்; இந்த அமைச்சரவையையும் நாம் பார்த்திருக்க முடியாது! அண்ணா அவர்கள் அரசியலில் ஒரு புதிய திருப்பத்தைச் செய்தார்கள்!

ஆனால், அப்படிப் பிரிவினைக் கொள்கையை நாம் கைவிட்ட பிறகும், இந்தியை நாம் எதிர்ப்பதாலேயே, 'பிரிவினையின் பெயரால்தான் இந்தியை எதிர்க்கிறார்கள்' என்று காங்கிரசுக்காரர்கள் கூறிவருகிறார்கள்! இன்னும் அவர்கள் நம்மை, 'அழிக்க வேண்டும்' என்ற எண்ணத்திலேயே அப்படிக் கூறிவருகிறார்கள்!

'என்றென்றைக்கும் நாமே இந்த நாட்டை ஆளவேண்டும்' என்ற எண்ணத்திலேயே காங்கிரசுக்காரர்கள், பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தனர்; ஆனால் அவர்கள் எண்ணம் அண்ணாவிடம் தோற்றுப் போயிற்று!

தி. மு. கழகத்தின் பாதை—அறிஞர் அண்ணாவின் பாதை சரியான பாதை என்பதை, நடந்து முடிந்த தேர்தல் எடுத்துக் காட்டுகிறது! வடக்கத்திக்காரர்கள் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்!

(4-ம் பக்கம் பார்க்க)

'மாஜி'களின் முகாரி!

இராமையா என்ற ஒருவர் தமிழகத்தில் 'மந்திரி'யாக இருந்தாரே—நினைவிருக்கிறதா? மறந்திருந்தால் நினைவுப் படுத்திக் கொள்ளுங்கள்!

'மாஜி'யாகி பத்து மாதத்துக்குப்பின் அவர் இப்போது, தம் திருவாயைத் திறந்திருக்கிறார்—திரு வாலவாய்த் திருநகரில்!

மாஜி முதல் மந்திரி பக்தவத்சலனாருக்கு ஒரு மாதத்துக்கு முன்பு சென்னையில் பிறந்த நாள் விழாக் கொண்டாடியதும், அதில் இன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கியதும் நினைவிருக்கலாம்.

"போயும் போயும், ஒரு மாற்றுக் கட்சி முதலமைச்சரின் வாயாலா பாராட்டுரையைப் பெறுவது?" என்று சக கட்சித் தோழர்கள் குத்தலாகக் கேட்டிருக்கிறார்கள்; உடனே, 'அப்படியா சொன்னீர்கள்?' என்று பதிலுக்குக் கேட்டுவிட்டு, மற்றொரு விழாவை ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்—மீஞ்சூர் பெருந்தகை!

அசல் காங்கிரசுக் கட்சி முதலமைச்சர் ஒருவரையே அழைத்துப் பாராட்ட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்!

மைசூர் முதல் மந்திரியான நிஜலிங்கப்பா வந்து பக்தவத்சலனாரைப் பாராட்டிச் சில வார்த்தைகளும், அதே நேரத்தில் பக்தவத்சலத்துக்குப் பிடித்தமாக அறிஞர் அண்ணாவைப் பற்றி மறைமுகமாகத் தாக்கிச் சில வார்த்தைகளும் பேசியிருக்கிறார்!

'நிஜலிங்கப்பா பாராட்டு எப்படி அமைந்துவிடுமோ' என்ற சந்தேகத்தில் பக்தவத்சலனார், அரியலூர் அழகேசனையும் கையோடு அழைத்துக் கொண்டுவந்து விழாவில் கலந்துகொண்டிருந்திருக்கிறார்! அவருடைய பாராட்டை காது குளிரக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்!

இந்த 'மாஜி'யைப் பற்றி அந்த 'மாஜி' பாராட்டியதில் வியப்பில்லை! இரண்டு 'மாஜி'களும், 'சஷ்டகர்கள்' என்பது தான் நாடறிந்த விஷயமாயிற்றே!

எனவேதான், புதிய 'மாஜி'—அதாவது, இதுவரை முகவரி தெரியாமல் இருந்துவந்த 'மாஜி'யை அழைத்துப் பேசச் சொல்லியிருக்கிறார்கள்! அவர்தான் 'மாஜி' கனம் வி. இராமையா அவர்கள்!

இந்த மூன்று 'மாஜி'களும் பேசிய பேச்சின் சாரம், பதவி பறிபோனதைப் பற்றிய முகாரிதான்!

அண்ணாவைப் பற்றியும், அண்ணா ஆட்சியைப் பற்றியும் ஒரு பிடி பிடித்துவிட்டதாக அவர்களுக்குள் ஆத்ம திருப்தி!

அண்ணாவைத் தாக்குவதாக நினைத்துக்கொண்டு, சிறப்பு அழைப்பாளரான நிஜலிங்கப்பாவையே தாக்கியிருக்கிறார் அரியலூரார்!

மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்துவதாகக் கூறிய தி. மு. க. அரசு, அதனைத் தீவிரப்படுத்தவில்லையாம்! எனவே 'தமிழக அரசு தவறான போக்கில் செல்கிறது' என்று மக்கள் எடுத்துக் கூறவேண்டுமாம்.

அழகேசனின் இந்த அதிதீவிர தேசபக்தப் பேச்சைக் கேட்டு, நிஜலிங்கப்பாவின் முகம் ஆயிரம் கோணல்களாகக் காட்சியளித்ததாம்!

அசல் காந்திய வாரிசுகளின் ஆட்சி நடக்கும் மைசூர் மாநிலத்தில், கொஞ்சநஞ்சம் இருந்த மதுவிலக்கும் நிஜலிங்கப்பா கையால் சமாதி கட்டப்பட்டுவருவதை மறந்து—அவர் அருகில் இருப்பதையும் மறந்து பேசியிருக்கிறார் அரியலூரார்!

மற்றொரு 'மாஜி'யான புதுக்கோட்டையாரோ 'தேர்தலில் காங்கிரசு ஏன் தோற்றது' என்ற தமது ஆராய்ச்சியின் முடிவை வெளிப்படுத்தி, ஒரு குரல் அழுது இருக்கிறார்!

'சாதியின் பெயரால்—மொழியின் பெயரால் தூண்டிவிட்டு மக்களை ஏமாற்ற முடியும்' என்பதன் சிகரம்தான், கடந்த பொதுத் தேர்தல் முடிவாம்! சாதியைக் காட்டித் தேர்தலில் நின்று—செல்வாக்கைக் காட்டி 'மந்திரி'யான இராமையாதான் இப்படிக்கூறுகிறார்!

'இத்தனையும், பக்தவத்சலத்தின் பிறந்தநாள் விழாப் பேச்சா' என்று வியப்படையாதீர்கள்! இவை மட்டுமல்ல—இன்னும் நிறையப் பேசினார்கள்! எல்லாம் தி.மு.க. ஆட்சி பற்றிதான்! எல்லாம் அரசியல் பேச்சுதான்! பக்தவத்சலத்தைப்பற்றிப் பேசியதாக இரண்டு வரிகூடப் பத்திரிகைகளில் இல்லை!

பக்தவத்சலத்துககுப் பிடித்தமாக உள்ளதைப் பேசினாலே போதும்—என்று அவர்களுக்கு நினைப்புபோலும்! பிறந்த நாள் விழாவில், தி.மு.க. பற்றிய 'அர்ச்சனை' செய்து—அவருக்கு இதமான 'பாத பூசை' நடத்தியிருக்கிறார்கள்!

பக்தவத்சலம் மட்டும் என்ன—சொத்தையா? அவருடைய பங்கையும் விட்டுக்கொடுக்கவில்லை! வெளுத்துக் கட்டியிருக்கிறார் அண்ணாவை!

சென்னையில் நடந்த பிறந்த நாள் விழாவில் அண்ணாவின் வாயால் புகழப்பட்டு, அண்ணாவுக்கும் தம் வாயால் புகழாரம் சூட்டினாரல்லவா பக்தவத்சலம்!

ஓர் எதிரியின் வாயால் பாராட்டுப் பெற்று அந்த எதிரியையே தாமும் பாராட்டுவதா? அந்தப் 'பாவ'த்துக்குப் 'பிராயச்சித்தம்' தேடும் விழாதானே மதுரையிலே ஏற்பாடு செய்யப்பட்டது? எனவே, துணிந்து சக்கை போடு போட்டார்—'அண்ணாதுரையின் பேச்சில் பிரிவினைப் பிரச்சாரம் கலந்திருக்கிறது' என்று!

'அப்படியா சங்கதி?' என்று மைசூர் நிஜலிங்கப்பாவும் ஒரு குரல் கொடுத்துவைத்தார்—'இந்தியா ஒரே நாடு என்பதை ஒப்புக்கொள்ளாதவர்களெல்லாம் துரோகிகள்' என்று!

அவர் இப்படிப் பேசியதில், பக்தவத்சலத்துக்குப் 'பரம திருப்தி'யாம்! மற்ற 'மாஜி'களுக்கும் ஆத்ம திருப்தியாம்!

—மா. செ.

காதில் விழுந்தது!

"'எந்த மாநிலமும் சீனாவின் காலனியாக இருக்க அனுமதியோம்' என்று நாடாளுமன்றத்தில், காங்கிரசு உறுப்பினர் அனுமந்தையா எச்சரித்திருக்கிறாரே, படித்தீர்களா—இன்றைய பேப்பரில்?"

"படித்தேன்; வங்காளத்திலும், கேரளத்திலும் உள்ள சில 'கம்யூனிஸ்டுப் போக்கு'களை மனதில் கொண்டு பேசுகிறார் போல் தெரிகிறது!"

"அதெல்லாம் ஒருபுறமிருக்கட்டும்; சீனா வடக்கே அபகரித்த பல ஆயிரக் கணக்கான சதுர மைல்கள் அப்படியே இருக்கிறதே—அதைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம்; அனுமந்தையா இதை மட்டும் சொல்வது, அதையுமல்லவா நினைவுபடுத்துகிறது?"

இரயில்வே ஊழியரிடை 'எம்ப்ளாயீஸ் யூனியன்' பெற்றுள்ள செல்வாக்கு!

'லோன் சொசைட்டி'த் தேர்தலில் மகத்தான வெற்றி

இன்னமும் அங்கீகரிக்காமல் இருப்போருக்கு துணைத் தலைவர் ஜி. பராங்குசம் கண்டனம்

திருச்சி, நவ. 14—

11—11—67 அன்று நடைபெற்ற தென் இரயில்வே லோன் சொசைட்டி டைரக்டர்கள் தேர்தலில், தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியனுக்கும் — மஸ்தூர் யூனியனுக்கும் பலத்த போட்டி ஏற்பட்டது.

எம்ப்ளாயீஸ் யூனியன் சார்பில் நின்ற தோழர்கள் எஸ் முத்துக்கிருட்டினன், எம். சீனிவாசன் ஆகிய இருவரும், மஸ்தூர் யூனியன் சார்பில் நிறுத்திவைக்கப்பட்ட தோழர் ஏ. சைமன், பார்த்தசாரதி ஆகியோரைவிட 600 ஓட்டுகள் அதிகம்பெற்று வெற்றிவாகை சூடினர்.

வெற்றிச் செய்தி 12—11—67 காலை அறிவிக்கப்பட்டவுடன், திருச்சி சந்திப்பிலிருந்து தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியனைச் சார்ந்த நூற்றுக்கணக்கான தோழர்கள், வெற்றி முழக்கங்களை முழங்கியவண்ணம்; ஊர்வலமாகச் சென்று பொன்மலை சங்கத் திடலை அடைந்தனர்.

தோழர் இ. ரெங்கநாதன் தலைமையில் பாராட்டு—நன்றியறிவிப்புக் கூட்டம் நடைபெற்றது; வெற்றிபெற்றவர்களைப் பாராட்டி தோழர்கள் ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., ஜி. பராங்குசம், என். கணபதி, வி. நம்மாழ்வார் ஆகியோர் பேசினர்.

வெற்றிபெற்ற இருவரும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

ஜி. பராங்குசம் அறிக்கை

தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் துணைத் தலைவர் தோழர் ஜி. பராங்குசம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:—

"11—11—67 அன்று நடைபெற்று முடிந்த இரயில்வே லோன் சொசைட்டி தேர்தலில், தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியனுக்கும்—மஸ்தூர் யூனியனுக்கும் ஏற்பட்ட பலத்த போட்டியில் எம்ப்ளாயீஸ் யூனியன் வெற்றி பெற்றிருக்கிறது.

"இந்த யூனியனுக்குத் தொழிலாளர் மத்தியில் நிலவும் செல்வாக்கு மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுவிட்டது; 'இரயில்வேத் தொழிலாளர்களின் நம்பிக்கை பெற்ற சங்கம் எம்ப்ளாயீஸ் யூனியன்தான்' என்பது உறுதி செய்யப்பட்டுவிட்டது.

"இரயில்வே நிர்வாகம் இனியும் சங்கத்தை அங்கீகரிக்காமல் இருப்பது கண்டிக்கத்தக்கது. இனியாகிலும் இந்த உண்மையை உணர்ந்து, நிர்வாகம், 'தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியனை அங்கீகரிக்க முன்வரவேண்டும்' என்று கேட்டுக்கொள்கிறேன்."

ஆத்தூர் வட்டத்தில் பயங்கர வெள்ளச் சேதம்

23 பேர் உயிரிழந்தனர்--650 குடும்பங்கள் வீடிழந்து தவிப்பு

பாதிக்கப்பட்டோருக்கு அரசு அவசர உதவி-- நிவாரணப் பணிகளில் கழகத் தோழர்கள்!

சேலம்—ஆத்தூரில் 650 வீடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன; கால்நடைகள் மிகவும் சேதமடைந்தன; 23 பேர் உயிரிழந்தனர்.

ஆத்தூர்-முல்லைவாடி இடையே உள்ள பெரும்பாலம் உடைபட்டது; அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது.

வெள்ளப் பகுதிகளை 8—11—67 அன்று ஆத்தூருக்கு வருகைதந்த மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு, உடனடியாக முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் சொல்லி தக்க நிவாரண நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 40 அளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாக ஆத்தூர் நகர தி. மு. க. சார்பில் வட்டச் செயலாளர் டி. கே. மாதவன், தலைவாசல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம். மாரிமுத்து, ப.அ. ஆறுமுகம், ஆர். கன்னையன், நகர செயலாளர் எஸ். இராமசாமி, டாக்டர் சௌந்திரராசன், ஏ. நாச்சிமுத்து, டி. சண்முகம், கே. எஸ். மணி, நகராட்சிமன்ற ஆணையாளர் எம். ஆறுமுகம், ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி, தாசில்தார் மருதமுத்து, மற்றும் கழக தோழர்களின் முயற்சியால் ஆறுமுகனார் மன்றம்—முகம்மதியர் பாடசாலை—ஆர். சி. இடைநிலைப் பள்ளி—உடையார் பாளையம் ஆகிய இடங்களில் உணவு அளிக்கப்பட்டது.

மேற்கொண்டு நிவாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன

வட்டச் செயலாளர் தோழர் டி. கே. மாதவன் அவர்கள் 16—11—67 அன்று புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துரைத்தார்; அதற்கு அவர், அண்ணாவிடம் சொல்லி தக்க உதவிகள் செய்வதாகக் கூறினார்.

காங்கிரசு ஏட்டுக்கு வக்கில் நோட்டீசு

எஸ். ஏ. இராசமாணிக்கம் சார்பில் அனுப்பப்பட்டது

கோவை, நவ. 15—

காங்கிரசு ஏடு ஒன்றில், கோவை வட்ட தி. மு. க. செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.சி. அவர்கள் பற்றி அவதூறாக எழுதப்பட்டுள்ளதாக இராசமாணிககம் சார்பில் வக்கீல் நோட்டீசு அனுப்பப்பட்டுள்ளது.

கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினராகிய எஸ். ஏ. இராசமாணிக்கம், தகாத முறையில் பணம் சேர்த்துக் 'கார் வாங்கி விட்டதாக அந்தக் காங்கிரசு ஏட்டில் எழுதப்பட்டிருந்தது.

அவதூறாக எழுதியதற்காக அந்த ஏட்டின் ஆசிரியர் மன்னிப்புக் கேட்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

பத்திரிகை ஆசிரியருக்கும் அச்சிடுபவருக்கும் வழக்கறிஞர் க. ரா. அப்பையன் இந்த நோட்டீசை அனுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவசப் பஸ் பயணம்

கேரள அரசினரின் இரண்டாவது கட்டச் சலுகை

மாநிலத்திற்குள் கேரள அரசின் பஸ்களில் பயணம் செய்யும் கேரள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவச அனுமதி தருவதென பஸ் போக்குவரத்து நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.

இதுவரையில் அவர்களது பயணத் தொகையினை, போக்குவரத்து நிறுவனம், கேரள அரசிடமிருந்து வசூலித்துவந்தது.

கேரள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசப் பயண அனுமதியை இரண்டு மாதங்களுக்கு முன் வழங்கிய போக்குவரத்து நிறுவனம், இப்போது இந்த வசதியை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அளித்திருக்கிறது.

மற்ற மாநிலங்கட்கு வழி காட்டும் அண்ணா ஆட்சி

வங்க அமைச்சர் பாராட்டு

"தமிழ்நாட்டில் இனிக் காங்கிரசுக் கட்சி பதவிக்கு வர முடியாது என்பதை, தென் சென்னை இடைத்தேர்தல் மெய்ப்பித்துவிட்டது.

"சென்னையில் மட்டும் அல்ல—காங்கிரசல்லாத அமைச்சரவைகள் உள்ள எந்த இடத்திலும் இனிக் காங்கிரசு ஆட்சிக்குத் திரும்ப முடியாது!

"தமிழ்நாட்டில் உள்ள அண்ணாதுரையின் ஆட்சி, காங்கிரசல்லாத அமைச்சரவைகளுக்கெல்லாம் முன்னுதாரணமாக இருக்கிறது!"

---ஹேமந்த்குமார் போஸ்
(வங்க அமைச்சர்)

தமிழக மேலவை

சென்னை, நவ. 15—

தமிழகச் சட்டமன்ற மேலவை நவ. 24-ம் நாள் மாலை 3-மணிக்கு கூடும்.

"தொழிலதிபரும் தொழிலாளரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பது தொழில் துறையில் சீரான பொருளாதாரத்தைப் பாதுகாக்க இயலாது" --- தமிழக அமைச்சர்கள் அறிவுரை

'இரு தரப்பாரும் முறைதவறி நடந்துகொள்ளுகின்றனர்'

'உரிமையைத் தவருகப் பயன்படுத்துவதனுல் உருவாகும் நிலையை உணருவது அவசியம்'

'எவருடைய வன்செயல்களையும் அரசு அனுமதிக்காது --- போராடிப் பெற்ற உரிமையைப் பாதுகாக்கவும் தயங்காது'

சென்னை, நவ. 17—

"நாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் பிரச்சினையில் தங்களுடைய மனப்பான்மையை மாற்றிக் கொள்ளாவிடில், தொழில் துறையின் சீரான பொருளாதார நிலைமையைப் பாதுகாப்பது இயலாத ஒன்ருகி விடும் !

"தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினருமே முறைதவறி நடந்துகொள்ளுகின்றனர் ; இருதரப்பினரும் ஒருவரையொருவர் கடுமையாகக் குற்றஞ்சாட்டுகின்றனர் ; இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பது வேறு ஒன்ருகும்.

"ஆனுல் ஒரு உண்மை புலப்படுகிறது ; அதாவது, தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை அதிகமாக உணர்ந்திருக்கின்றனர் ; அதிகமாகப் பலம் உள்ளவர்களாகவும் இருக்கின்றனர் ; பாதுகாப்பு இல்லாத போது தொழிலாளர்களைத் தொழிலதிபர்கள் நடத்தி வந்ததுபோல் இனியும் நடத்தமுடியாது ; தொழிலதிபர்கள், தொழிலாளர்களை மனிதர்களாக நடத்தவேண்டும் ; அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை உணர்ந்து ஒப்புக்கொள்ளவேண்டும் ; மற்றும், தொழிலாளர்களுடைய விருப்பங்களுக்கு மதிப்புத் தரவேண்டும் !

"ஆகவே, நாட்டின் சூழ்நிலை மாறிவிட்டதால், தொழிலாளர் பிரச்சினையில் நிர்வாகிகளின் மனப்பான்மையும் அடியோடு மாறவேண்டியது அவசியம் ; இதைச் செய்யாவிட்டால், தொழில் துறையில் சீரான பொருளாதார நிலைமையைப் பாதுகாக்க முடியாது !"

—இவ்வாறு அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இங்கு நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் விளக்கிக் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

நாட்டின் நலனுக்கு ஏற்றதுதானு?

தொழிலாளர்களின் நடவடிக்கைகள் சில சமயங்களில் நாட்டின் நலன்களுக்கு ஏற்றதாக இல்லை.

தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய உரிமை இருப்பினும், அந்த உரிமையைக் கண்டபடி அவர்கள் பயன்படுத்தக்கூடாது.

தமது நியாயமான உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகத்திற்கு இடமன்னியில் தெரியவந்தாலன்றி, அவர்கள் வேலை நிறுத்தம் செய்யும் உரிமைப் பயன்படுத்தக் கூடாது.

தொழிலாளர்கள் வன்செயல்களைக் கைவிட வேண்டும்.

தொழிலாளர்களிடம் அனுதாபத்துடனும் பரந்த நோக்கத்துடனும் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தைத் தொழிலதிபர்கள் உணர வேண்டும்.

இவையெல்லாம் செய்யப்பட்டால்தான், மாநிலத்தின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும்.''

"கிளர்ச்சியின் பெயரால் தொழிலாளர்கள் வன்செயல்களில் இறங்குவதை அரசு அனுமதிக்காது.

ஆனுல், கிளர்ச்சி செய்வதற்கான தொழிலாளர்களுடைய உரிமையை அரசினர் அடக்க முடியாது.

நமது நாட்டில் சனநாயகக் கொள்கைகளை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறேம் ; அந்தக் கொள்கைகளின் அடிப்படையிலேயே எங்களுடைய கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

எந்த சனநாயகவாதியும் எந்தப் பெயரில் வன்செயல்கள் நடத்தப்பட்டாலும், அவற்றை ஒப்புக்கொள்ள மாட்டார்.

உண்மையைக் கூறுமிடத்து, வன்செயல்களையோ அல்லது கிளர்ச்சியையோ அரசு அங்கீகரிக்கவில்லை ; ஏனெனில், அமைதியிலும், தொழில் விருத்தியிலும், உற்பத்திப் பெருக்கத்திலும் அரசுக்கு அக்கறை உண்டு.

அதே நேரத்தில், தொழிலாளர்களின் உரிமைகளை நாங்கள் கட்டுப்படுத்தமாட்டோம்; ஏனெனில் அவர்கள் பல நூற்ருண்டுகளாகப் போராடி உரிமைகளைப் பெற்றிருக்கின்றனர்."

ஒரு அரசியல் கட்சி சனநாயகக் கட்சியாக நமது அரசியல் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகையில், அந்தக் கட்சியுடன் இணைந்துள்ள தொழிற்சங்கத்தைப் பற்றிப் பீதி உண்டு பண்ணுவதால், பிரச்சினைகள் மேலும் கடினமாகிவிடும்.

ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் இருப்பதுதான் நல்லது என்று அரசு, தெளிவாகத் தெரிவித்திருப்பினும், பிரச்சினைகளை உறுதியுடன் தீர்ப்பதற்கு நாம் முயற்சி எடுக்கவேண்டும்."

'உரிமைகளை நாங்கள் கட்டுப்படுத்த மாட்டோம்'

அமைச்சர் மாதவன் விளக்கம்

கருத்தரங்கைத் துவக்கிவைத்து சட்டத்துறை அமைச்சர் மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

பலனளிக்கவில்லை யாம் !

புதுடில்லி, நவ. 17—

தொலைபேசி (டெலிபோன்) சந்தாதாரர்சள் தரவேண்டிய கட்டணப் பாக்கியை வசூல் செய்வதற்கு அரசு எடுத்துக் கொண்ட தனி முயற்சிகள், பலன் ஏதும் அளிக்கவில்லையாம் !

சன. 1-ந் தேதிவரை, தொலைபேசி சந்தாதாரர்களிடமிருந்து வரவேண்டிய கட்டண நிலுவை ரூ. 5 கோடியாகும்.

பாதக நிலைமையை எதிர்பார்த்து போராட்டத்துக்கு தயாராகிறது ஐக்கிய முன்னணி!

ஏற்கனவே முடிவு செய்த, 'டிசம்பர் 18-ம் நாளுக்கு முன்பாகவே சட்டமன்றத்தைக் கூட்டவேண்டும் என்ற கவர்னரது விருப்பத்தினை ஏற்பதற்கில்லை' என்ற எண்ணத்தை, வங்க மாநிலத்தை ஆளும் ஐக்கிய முன்னணியினர் உருவாக்கியிருப்பதாகக் கல்கத்தா செய்தி ஒன்று கூறுகிறது.

"சட்டமன்றத்தில் வாக்கெடுப்பில் தோல்வியுறுவதைவிட, அமைச்சரவை 'டிஸ்மிஸ்' செயயப்படுவதே அரசியல் அடிப்படையில் நல்ல பயனைத் தரும்—என, கூட்டணியில் பங்கு பெற்றிருக்கும் கம்யூனிஸ்டுகள் கருதுவதாகத் தெரிகிறது.

சட்டமன்றத்தைக் கூட்டுவது பற்றிய அமைச்சரவையின் கருத்து, இன்று (நவ. 17) கவர்னருக்குத் தெரிவிக்கப்பட இருக்கிறது.

கவர்னரால் அமைச்சரவை 'டிஸ்மிஸ்' செய்யப்படுமென்பதை எதிர்பார்த்து, கூட்டணிக் கட்சிகள், அனைத்தும் போராட்டங்களுக்கான ஆயத்தங்களில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கின்றன !

தலைவர் வேண்டுமாம்— தமிழ்நாடு காங்கிரசுக்கு!

'ஸ்டேட்ஸ்மன்' தரும் விளம்பரமல்ல--- செய்தி விளக்கம் !

தெற்கத்திய மாநிலங்களான தமிழகம், கேரளம் ஆகிய பகுதிகளில் உள்ள பிரதேசக் காங்கிரசுக் கட்சிகள், தலைவர் பதவிக்கான 'ஆட்களை'க் கண்டெடுக்க—வலைவீசித் தேடி வருவதாக கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மன்' இதழின், தென்னகப் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

இத்தொடர்பில், அந்தப் பத்திரிகையின் 16—11—67 இதழில் அவர் எழுதியிருப்பதாவது :—

"ஏறக்குறைய பிரதேசக் காங்கிரசுக் கமிட்டிகளும், தங்கள் தலைவர் பதவிகளுக்கான 'ஆட்களை'த் தேர்ந்தெடுப்பதில் தீவிரம் காட்டிவரும் போது, கேரள—தமிழ்நாடு காங்கிரசுக் கட்சிகளுக்கு மட்டும், அது, தீர்வுகாண முடியாத பிரச்சினையாக வளர்ந்து விட்டிருக்கிறது !

கேரளத்தில் 'தலைவர்' கிடைப்பதே அரிதாக இருக்கிறது ! அப்படியே கிடைத்தாலும், அவர் எல்லா பகுதியினருக்கும் ஏற்ற மனிதராக இருப்பது கடினமாக இருக்கிறது !

தென்னகத்தில் மிக நலிந்த அமைப்பு, கேரளக் காங்கிரசுதான ! பொருத்தமான தலைமை கிடைத்தால்தான், அது, மீண்டும் தலைதூக்க முடியும் !

தமிழகத்துக் காங்கிரசு நிலைமையோ பின்வருமாறு இருக்கிறது :—

கட்சியின் தொண்டர்களுக்கு—மற்ற வட்டாரத் தலைவர்களுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ—'காமராசருக்கு வேண்டியவர்தான் கட்சியின் தலைமைப் பதவிக்கு வரமுடியும்' என்ற நிலைதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது !

தமிழ்நாடு காங்கிரசில் தலைவர் பதவிக்கு என்னவோ ஆள் பஞ்சமில்லை ; சி. சுப்பிரமணியம், ஒ. வி. அழகேசன், பக்தவத்சலம்—என்று, ஏராளமான பேர் இருக்கிருர்கள் !

ஆனுல், 'இவர்களில் ஒருவரைக் காமராசர் தேர்வு செய்வாரா' என்பதுதான் பொறுத்திருந்து பார்க்கவேண்டிய ஒன்ருக இருக்கிறது !

தி.மு. கழகம் ஆட்சியில் இருப்பதால் 1972-ல் நிலைமைகளைச் சமாளிக்கக் காங்கிரசின் கிளைப் பிரிவுகள், இப்போதிருந்தே தாங்கள் 'இழந்துள்ள பெருமை'களை மீண்டும் பெற முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது.

தமிழகம் வரும் மத்திய அமைச்சர்கள் சிலர், கழக நிர்வாகத்தை மனமாரப் புகழ்ந்துவிட்டுச் செல்வது, இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கட்கு வெறுப்பைக் கொடுக்கிறது ! கட்சியைச் சீர்செய்யும் தங்கள் முயற்சிகளெல்லாம் பாழாவதாக சிலர் புகார் செய்கிருர்கள் !

அண்மையில் நடந்த ஜபல்பூர் அனைத்திந்திய மாநாட்டுக்கு தமிழகத்தைச் சேர்ந்த 44 பேர்களில் ஐந்து பேரே சென்றது, பார்வையாளர்களுக்கு சந்தேகத்தைக் கொடுத்திருக்கிறது !

'வழிச் செலவுக்குப் போதிய பணம் இல்லாததுதான், ஜபல்பூருக்குப் போகாததற்குக் காரணம்' எனக் காரணம் காட்டப்படுகிறது !

க. இராசாராம் பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் இங்கே உள்ளவர்கள், வஞ்சக எண்ணத்துடன் ;கழகத்தை அழிக்க எண்ணுகிருர்கள் ! அவர்கள் எண்ணத்திற்கு மாருச, நாமெல்லாம் பெருமையும் பூரிப்பும் அடையும் வகையில், மாறன் வெற்றிபெற்று வந்திருக்கிருர். இவ்வெற்றியைத் தேடித்தந்த அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

நடக்க இருப்பவை

18--11--67

புதுவை 15-வது வட்டம்

தி. மு. க. கிளை திறப்பு விழா ; மாலை 3-மணிக்கு 54, ஆம்பூர் சாலையில் ; தலைவர் : சு. ம. சுப்பராயன் ; பணிமனைத் திறப்பாளர் : இரெ. இளம்வழுதி எம்.ஏ.பி.எல்.எம்.எல்.ஏ.; கொடியேற்றுபவர் : எம். ஏ. சண்முகம்; அறிஞர் அண்ணு, இரா. நெடுஞ்செழியன், மு. கருணுநிதி, கலைவாணர் என். எஸ். கே., புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஆகியோர் உருவப் படங்களை முறையே சி. பி. திருநாவுக்கரசு பி,காம். பி.எல்., கி. கோவிந்தராசன், ஏ. புவியரசு, ஜி. பெருமாள் ராசா எம்.எல்.ஏ., வெ. சிங்காரம் ஆகியோர் திறந்துவைப்பர் ; மாலை 6-மணிக்கு ஒதியஞ் சாலைத் திடலில் சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலைநிகழ்ச்சி நடைபெறும் ; தலைவர் : சி. என். பார்த்தசாரதி ; பேசுவோர் : இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., எம். ஏ. சண்முகம்.

களாம்பாக்கம்

தி. மு. க. சார்பில் தென் சென்னை வெற்றி விழாவும் பாராட்டுக் கூட்டமும் ; மாலை 6-30 மணிக்கு ; தலைவர் : ப. பாலன் ; பாராட்டுப் பெறுவோர்: சி. வி. எம். அண்ணுமலை எம்.எல்.ஏ., சா. கணேசன் எம்.சி.; பாராட்டுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., எஸ். ஜே. இராமசாமி எம்.எல்.ஏ., மா. செங்குட்டுவன், அ. நடராசன்.

வீ. அய்யம்பாளையம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோவில் திடலில் ; தலைவர் : ஆர். சித்தன் ; பேசுவோர் : நன்னிலம் நடராசன், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., அ. கலியபெருமாள், வை. தனரத்தினம், மு. மலையாளி, க. பழனிவேல், செ. ரெங்கசாமி.

19--11--67

மங்கப்பட்டி

தி. மு. க. துவக்க விழா ;. இரவு 7-மணிக்கு ; தலைவர் : ச. பாலகிருட்டினன் ; பேசுவோர் : நன்னிலம் நடராசன், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., அ. கலியபெருமாள், ப. முத்து.

விசுவநத்தம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு கே. வி. கே. சாமி திடலில் ; தலைவர் : பு. சந்தனம் ; பேசுவோர் : சொ. கோவிந்தராசன் எம்.எல் ஏ., எஸ். பி. மணியம், வே. கருணுகரன், சி. பெ. குருசாமி, எஸ். ஏ. ரசாக், ஏ. துரைக்கண்ணன், அப்தாலிப், அ. காளியப்பன், ச. பழனிக்கனி, ஏ. எஸ். கனி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக; திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible]) [illegible]